**MCOP NO: 4129/2021** **DATE: 19.08.2025**

ம.சா :1

பெயர் : திரு.அம்பிகா

க/பெ : திரு. விஜய நாராயணன்

வயது : 62

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த விபத்தில் இறந்தவா் எனது கணவா் ஆவாா். இந்த விபத்தை நான் நேரில் பாா்க்கவில்லை. விபத்து பொருத்து எனக்கு யாா் தகவல் கொடுத்தாா்கள் என்றால் விபத்து நடந்த இடத்தில் ஆட்டோ ஸ்டேன்டில் இருந்த ஒருவா் சொன்னாா். 28.02.2021 ஆம் தேதி எனது கணவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சோ்க்கப்பட்ட விவரத்தைநான் தொரிந்து கொண்டேன். நான் அந்த மருத்துவமனைக்கு சென்று நான் அவரை பாா்த்தபோது அவா் உயிருடன் தான் இருந்தாா். விபத்து நடந்த மறுநாள் எனது மகன் தான் புகாா் கொடுத்தாா். செங்கல்பட்டு மருத்துவமனையில் எனது கணவருக்கு ஆக்ஸிஜன் ஏற்றப்பட்ட நிலையில் வைத்து இருந்தாா்கள். நாங்கள் போன பின்னிட்டு தான் நுன்கதிா் படம் எடுக்கப்பட்டது. எனது கணருக்கு முன்னந்தலையிலும் மேலும் இடுப்பு எலும்பு முறிந்துவிட்டு மேலும் கை, கால்களில் சிறாய்ப்பு ஏற்பட்டு இருந்தது. முன்னந்தலையில் ஏற்பட்டு காயத்திற்கும் மட்டும் ஸ்கேன் எடுக்கப்பட்டது. இடுப்பு எலும்பு முறிவுக்கு நுன் கதிா் படம் எடுக்கவில்லை. ஸ்கேன் ரிபோா்டை மனுவில் தாக்கல் செய்யவில்லை. 28.02.2021 க்கு மாலை பின்னிட்டு எனது கணவரை செங்கல்பட்டு மருத்துவமனையில் இருந்து அழைத்து சென்று ராமச்சந்திரா மருத்துமனையில் சோ்த்தோம். விபத்து நடந்த தேதியானது 28.02.2021 ஆகும். ராமச்சந்திரா மருத்துமனையில் 10 நாட்கள் சிகிச்சை கொடுத்தோம். ராமச்சந்திரா மருத்துவமனையில் எனது கணவரின் முன்னந்தலையின் ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதை நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை. ராமச்சந்திரா மருத்துவமனையில் இடுப்பு முறிவுக்கு நுன் கதிா்படம் எடுக்கப்பட்டது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவா் ராமச்சந்திரா மருத்துவமனையில் இறந்து விட்டடாா். எனது கணவருக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அந்த

சான்றிதழை ஒப்படைக்கவில்லை. ராமச்சந்திரா மருத்துவமனையில் எனது கணவா் இறந்ததற்கான அறிக்கையை நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 5 ஆன ஆவணத்தில் எனது கணவாின் இறப்பிற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது மகன் கொடுத்த புகாரில் எனது கணவா் சாலையை கடக்கும்போது தான் நடந்தது என்று காட்டப்பட்டுள்ளது. எனது கணவா் பாதசாரிகள் கடப்பதற்கான ஒதுக்கப்பட்ட வழியாக கடக்காமல் கவணக்குறைவாக சாலையின் குறுக்கே கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சாியல்ல. விபத்தானது எனது கணவாின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சாியல்ல. எனது கணவர் மீது மோதிய வாகனத்தின் பதிவு எனக்கு தொியாது. இந்த விபத்து சம்பந்தமாக தயாா் செய்த வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை. விபத்தின் போது எனது கணவா் கனரா வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவா் ஆவாா். ஓய்வு பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மேலும் எனது கணவா் ஓய்வூதியமாக மாதம் 20,000/- பெற்று வந்தாா் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரின் ஓய்வூதிய பணம் வங்கியின் மூலம் தான் கொடுக்கப்படும் என்றால் சாிதான். எனது கணவாின் வங்கி கணக்கை தாக்கல் செய்யவில்லை. எனது கணவா் கனரா வங்கியில் பணியில் இல்லை என்று சொன்னால் சாியல்ல. இழப்பீடு பெற வேண்டும் என்ற என்னத்துடன் ஓய்வூதியம் பெற்று வந்தாா் என்று சொன்னால் சாியல்ல. எனது கணவருக்கு வேறுநோய்கள் கிடையாது. விபத்தினால் எனது கணவருக்கு சாதாரண காயங்கள் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சாியல்ல. எனது கணவருக்க ஏற்பட்ட இறப்பானது இயற்கை மரணம் என்றால் சாியல்ல. விபத்தில் ஏற்பட்ட கயங்களுக்கும் எனது கணவரின் இறப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சாியல்ல. எனது கணவரின் இறப்பானது இயற்கை மரணம் என்பதாலும் எனது கணவரின் அஜாக்கிரதையாலும் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சாியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.